உங்களது உரிமைகளும் பொறுப்புக்களும்

‘சவுத் அவுஸ்திரேலிய மாநிலப் பொது சுகாதார முறைமையினது நுகர்வோர் சாசனம்’

Government of South Australia
SA Health

'அவுஸ்திரேலிய தேசிய நூலக வெளியீட்டு அட்டவணை'க் குறிப்பு

தலைப்பு: 'உங்களது உரிமைகளும் பொறுப்புக்களும்': சவுத் அவுஸ்திரேலிய மாநிலப் பொது சுகாதார முறைமையினது நோயாளர்களுக்கான நுகர்வோர் சாசனம் / சவுத் அவுஸ்திரேலிய மாநில அரசு, SA சுகாதாரம்

ISBN: 9780730898276 (pbk.)

தலைப்புக்கள்: மருத்துவ சட்டங்கள் மற்றும் சட்டமியற்றல்கள் -- சவுத் அவுஸ்திரேலிய மாநிலம்.

மருத்துவ ஊழியர்களும் நோயாளர்களும்--சவுத் அவுஸ்திரேலிய மாநிலம்.

மருத்துவமனை நோயாளர்கள்-- சட்டரீதி நிலை, சட்டங்கள், இதரம்--சவுத் அவுஸ்திரேலிய மாநிலம்.

இதர படைப்பாளர்கள்/பங்களிப்பாளார்கள்: சவுத் அவுஸ்திரேலிய மாநிலம்.
'சுகாதாரம் மற்றும் மூப்படைவுத் திணைக்களம்'

ட்யூவி இலக்கம் (Dewey Number): 610.696

உங்களது உரிமைகளும் பொறுப்புக்களும்

நீங்கள் பெறும் சுகாதார கவனிப்பு பாதுகாப்பானதாகவும், திறமையானதாகவும், செயலூக்கமுடையதாகவும் மற்றும் ஒரு தனிநபர் என்ற முறையில் உங்களுடைய உரிமைகளை மதிப்பதாகவும் இருக்கவேண்டும் என்பதில் 'SA சுகாதாரம்' பற்றுறுதி கொண்டுள்ளது.

அணுகல் உரிமை

சுகாதார மற்றும் சமூக சேவைகளை அணுகுவதற்கான உரிமை உங்களுக்குள்ளது

பாதுகாப்பு

துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பாய் இருப்பதற்கான உரிமை உங்களுக்குள்ளது

தரம்

உயர் தர சேவைகளைப் பெறுவதற்கான உரிமை உங்களுக்குள்ளது

மதிப்பு –மரியாதை

மதிப்பு –மரியாதையுடன் நடத்தப்படுவதற்கான உரிமை உங்களுக்குள்ளது

தகவல்கள்

என்ன நடக்கிறது என்பதைத் தெரிவிக்கப்படுவதற்கான உரிமை உங்களுக்குள்ளது

பங்கேற்பு

சுறுசுறுப்பான பங்கேற்பினை மேற்கொள்ளும் உரிமை உங்களுக்குள்ளது

அந்தரங்கத் தன்மை

அந்தரங்கம் மற்றும் தகவல் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான உரிமை உங்களுக்குள்ளது

கருத்துரைப்பு

கருத்துரைப்பதற்கான மற்றும்/அல்லது முறைப்பாடு செய்வதற்கான உரிமை உங்களுக்குள்ளது

The National Relay Service can provide assistance for people who require hearing and speaking assistance. National Relay Service: http://relayservice.gov.au/ Phone: 1800 555 660. If you or your carer need help talking to the health professionals who are responsible for your care you can ask a staff member to arrange an interpreter for you free of charge. This book has been translated and is available on the SA Health website www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Amharic

የብሄራዊ የቅብብሎሽ አገልግሎት (The National Relay Service) የመስማትና የመናገር ድጋፍ ለሚፈልጉ ሰዎች ድጋፍ ሊሰጥ ይችላል። የብሄራዊ የቅብብሎሽ አገልግሎት (National Relay Service): http://relayservice.gov.au/ የስልክ ቁጥር: 1800 555 660 እርስዎ ወይም ተንከባካቢዎ ለእርስዎ እንክብካቤ ሀላፊነት የተቀበሉትን የጤና ባለሙያዎች ለማነጋገር እርዳታ ከፈለጉ ሰራተኞችን የነፃ አስተርጓሚ እንዲያዘጋጁልዎ መጠየቅ ይችላሉ። ይህ መጽሐፍ ተተርጉሟል፣ በደቡብ አውስትራሊያ የጤና ድረገጽ ላይ ያገኙታል www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Arabic

توفر خدمة البث الوطنية (National Relay Service) المساعدة للأشخاص الذين بحاجة للمساعدة في السمع والنطق. خدمة البث الوطني: /http://relayservice.gov.au هاتف: 1800 555 660 إذا كنت انت أو من يرعاك بحاجة للمساعدة في التحدث مع مهنيي الصحة المسؤولين عن رعايتك، فإن بإمكانك الطلب من أحد الموظفين الترتيب لمجيء مترجم مجانا. تمت ترجمة هذا الكتيب وهو متاح على موقع دائرة صحة جنوب استراليا (SA Health) www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Chinese simplified

全国传递服务为有听障与语障的人士提供协助。全国传递服务的网址: http://relayservice.gov.au/电话:1800 555 660 如果您或者您的照顾者需要同主治医生交流，但又不会讲英语，您可以要求一名工作人员为您安排一位传译员，此服务免费。本手册已译成多种语言，可以在SA Health的网站上获取: www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Chinese traditional

全國中繼服務可為需要聽力和語言協助的人提供幫助。全國中繼服務網址:http://relayservice.gov.au/ 電話:1800 555 660在與為您提供治療的專業醫護人員交流時，如果您或者您的看護者需要語言溝通方面的協助，可向有關工作人員要求安排傳譯員。此服務是免費的。本手冊已被譯成中文，可從南澳健康部網站獲得 www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Dari

خدمات رله ملی، افرادی که ضرورت به کمکهای شنوایی و گفتاری دارند را کمک کرده می تواند. خدمات رله ملی: /http://relayservice.gov.au تلفون: 1800 555 660 اگرشما یا مراقب شما برای صبحت با کارکنان مسلکی خدمات صحی که مسولیت مراقبت از شما را برعهده دارند احتیاج به کمک دارید از یکی از کارکنان بخواهید تا بطورمجانی برای شما ترجمان بگیرد. این جزوه به زبانهای مختلف ترجمه شده و در وب سایت SA Health در www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities در دسترس می باشد.

Dinka

Aguir Baai Wël Cuɔt a lëu bë kɔc kony tɛ̈ ye kek kɔɔc wïc kuɔɔny ë pïŋpïŋ ku jam.
Aguir Baai Wël Cuɔt: http://relayservice.gov.au/ Telepun: 1800 555 660. Na wïc dumuök du kuɔɔny bë jam kek kɔɔc panakïm wën kek gɛ̈m yï döc, ka yïn a lëu ba jam kek kɔɔc panakïm bïk yï wiëc raan bï waar thok ku kën a bïk looi majan. Athör kën a cë waar yic thok kɔ̈k ku a tɔ̈u lɔ̈kaɣukar ë Pial Guöp SA tɛ̈n www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Greek

Η Εθνική Υπηρεσία Αναμετάδοσης δύναται να παράσχει βοήθεια σε άτομα που χρειάζονται βοήθεια ακοής και ομιλίας. Εθνική Υπηρεσία Αναμετάδοσης (National Relay Service): http://relayservice.gov.au/ Τηλέφωνο: 1800 555 660. Αν εσείς ή φροντιστής σας χρειάζεστε β οήθεια για να μιλήσετε στους επαγγελματίες υγείας οι οποίοι είναι υπεύθυνοι για τη φροντίδα σας μπορείτε να ζητήσετε από ένα μέλος του προσωπικού να διευθετήσει δωρεάν διερμηνέα για σας. Το βιβλιάριο αυτό έχει μεταφρασθεί και διατίθεται στην ιστοσελίδα SA Health www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Italian

L'ufficio National Relay Service può fornire assistenza a persone che necessitano di aiuto per udire e parlare. National Relay Service: http://relayservice.gov.au/ Telefono: 1800 555 660. Se voi o il vostro badante avete bisogno di aiuto per parlare con lo staff medico che vi assiste potete chiedere ad un impiegato del nostro personale di chiamare un interprete gratuitamente. Questo libretto è stato tradotto ed è disponibile sul sito web SA Health www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Khmer

សេវា National Relay Service អាចផ្តល់ជូនជំនួយសម្រាប់អ្នកដែលត្រូវការជំនួយក្នុងការស្តាប់ និងនិយាយ។សេវា http://relayservice.gov.au/ ទូរស័ព្ទ៖ 1800 555 660 ប្រសិនបើអ្នក ឬអ្នកថែទាំរបស់អ្នកត្រូវការជំនួយក្នុងការនិយាយទៅកាន់អ្នកជំនាញផ្នែកសុខភាពដែលទទួលខុសត្រូវចំពោះការថែទាំ របស់អ្នក អ្នកអាចស្នើសុំសមាជិកបុគ្គលិកឲ្យរៀបចំអ្នកបកប្រែភាសាជូនអ្នកដោយឥតគិតថ្លៃ។ សៀវភៅនេះត្រូវបានបកប្រែ ហើយមានផ្តល់ជូននៅលើវ៉ិបសាយ SA Health: www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Russian

Национальная релейная служба может оказать помощь людям, которые имеют нарушения слуха или речи. Национальная релейная служба: http://relayservice.gov.au/ Телефон: 1800 555 660. Если вам или лицу, осуществляющему за вами уход, необходима помощь во время беседы с медицинскими работниками, которые отвечают за предоставление для вас услуг по здравоохранению, вы можете попросить сотрудника, чтобы вам бесплатно предоставили переводчика. Эта книга была переведена и доступна на веб-сайте SA Health www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Spanish

El Servicio de Transmisión Nacional brinda apoyo a las personas que necesitan ayuda debido a problemas de audición o del habla. Servicio de Transmisión Nacional: http://relayservice.gov.au/ Teléfono: 1800 555 660. Si usted o su cuidador necesitaran ayuda para hablar con los profesionales de salud que están a cargo de su cuidado, puede pedirle a un miembro del personal que organice un intérprete de manera gratuita. Este folleto ha sido traducido y está a su disposición en la página web de SA Health www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Somali

Adeega Baahinta Qaranka ayaa taageero siin kara dadka in laga caawiyo u baahan hadalka iyo maqalkaba. AdeeggaBaahinta Qaranka: http://relayservice.gov.au / Telefoon: 1800 555 660. Haddi adiga iyo daryeelahaaga aad u baahataan in leydiinka kaalmeeyo la hadalka xirfadlayaasha caafimaadka ee masuulka ka ah daryeelkaaga waxaad weddiin kartaa mid ka mid ah shaqaalaha in uu kuu diyaariyo turjubaan bilaash ah. Buuga ayaa la tarjumay waxaana laga helaa website ka Hay'adda Caafimaadka Koofurta Awstaraaliya: www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Swahili

Huduma ya Kuunganisha ya Taifa inaweza kutoa msaada kwa watu wanaohitaji msaaada wa kusikia na kuongea. Huduma ya Kuunganisha ya Taifa: http://relayservice.gov.au/ Simu: 1800 555 660. Kama wewe au mlezi wako anahitaji msaada wa kuzungumza na wataalamu wa afya ambao wanawajibika kwa huduma yako unaweza kuuliza mfanyikazi kupanga mkalimani kwa ajili yako bila malipo. Kitabu hiki kimetafsiriwa na kinapatikana kwenye tovuti ya SA Health. www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Tagalog

Ang Pambansang Serbisyo ng Paghahatid ay nagbibigay ng tulong sa mga taong mahina ang pandinig at hirap sa pagsasalita. Pambansang Serbisyo ng Paghahatid: http://relayservice.gov.au/ Telepono: 1800 555 660. Kung ikaw o ang iyong tagapag-alaga ay kailangan ng tulong sa pakikipag-usap sa mga propesyonal na may pananagutan sa iyong pangangalaga, maari kang makipag-usap sa isang kawani upang mabigyan ka nang interprete na walang bayad. Ang aklat na ito ay isinalin at makukuha sa websayt ng Kalusugan SA: www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Tamil

செவி மடுப்பு மற்றும் பேச்சு விடயங்களில் உதவி தேவைப்படுபவர்களுக்கு ‘நேஷனல் ரிலே சர்வீஸ்’ – இனால் உதவ இயலும். ‘நேஷனல் ரிலே சர்வீஸ்’: http://relayservice.gov.au/ தொலைபேசி: 1800 555 660. உங்களுடைய கவனிப்பிற்குப் பொறுப்பாக இருக்கும் சுகாதாரத் தொழிலர்களுடன் பேசுவதில் உங்களுக்கோ அல்லது உங்களுடைய கவனிப்பாளருக்கோ உதவி தேவைப்பட்டால், இலவசமாக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை ஏற்பாடு செய்து தருமாறு எமது ஊழியர் ஒருவரை நீங்கள் கேட்கலாம். இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, மற்றும் www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities எனும் ‘SA சுகாதார’ வலைத்தளத்தில் இது கிடைக்கும்.

Vietnamese

Dịch Vụ Tiếp Âm Quốc Gia (The National Relay Service) có thể cung cấp các dịch vụ hỗ trợ những người cần trợ giúp trong việc nghe và nói. Dịch Vụ Tiếp Âm Quốc Gia (National Relay Service): http://relayservice.gov.au/ Điện thoại: 1800 555 660. Nếu quý vị hoặc người chăm sóc quý vị cần trợ giúp để nói chuyện với nhân viên y tế đang chịu trách nhiệm về sức khỏe của quý vị, quý vị có thể yêu cầu thu xếp một người thông ngôn miễn phí. Quyển sách này đã được dịch và có thể tìm thấy trên trang web của Bộ Y Tế Nam Úc www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

Interpreter

இலவச அழைப்பு ‘மொழிபெயர் த்துரைப்பு மற்றும் மொழிபெயர்ப்பு மையம்’:
1800 280 203
https://www.translate.sa.gov.au/

உள்ளடக்கம்

கவனிப்பு மற்றும் சேவைக்கான பற்றுறுதி 7

உங்களுடைய சுகாதார கவனிப்பு – உங்களால் எப்படி உதவ இயலும் 9

1. அணுகல் – சுகாதார மற்றும் சமூக சேவைகளை அணுகும் உரிமை 10
   விருப்பத்தெரிவு அறுவை சிகிச்சை மற்றும் காத்திருப்புப் பட்டியல்கள் 10
   பூர்வீகப் பழங்குடி சுகாதார அணிகள் 11
2. பாதுகாப்பு –துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை 11
3. தரம். உயர்தர சேவைகளுக்கான உரிமை 12
4. மதிப்பு – மரியாதை – மதிப்பு மரியாதையோடு நடத்தப்படுவதற்கான உரிமை 13
   முன்கூட்டிய கவனிப்பு உத்தரவுகள் 13
5. தகவல்கள் – தகவல்கள் தெரிவிக்கப்படுவதற்கான உரிமை 14
   பொது மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவமனை நோயாளர் 15
   கட்டணங்கள் மற்றும் நிதியுதவி 16
   SA ஆம்புலன்ஸ் சேவை 17
   நோயாளர் போக்குவரத்து உதவித் திட்டம் (PATS) 18
6. பங்கேற்பு – செயலூக்கத்துடன் பங்கேற்பதற்கான உரிமை 18
   சம்மதம் 19
   மாணவர்கள் 20
   மன நல நுகர்வோர் 20
   மன நல சேவைகளில் உள்ள நேரடி அனுபவப் பணியாளர்கள் 20
   குழந்தைகள் 21
7. அந்தரங்கத் தன்மை – அந்தரங்கம் மற்றும் தகவல் பாதுகாப்பிற்கான உரிமை 21
   உங்களைப் பற்றிய தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படும் தருணங்கள் 22
   சுகாதார சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு தகவல்களைப் பயன்படுத்துதல் 22
8. கருத்துரைப்பு – கருத்துரைப்பதற்கும் மற்றும் / அல்லது முறைப்படு செய்வதற்கும் உள்ள உரிமை 23
   மேல்முறையீடுகள் 25

கவனிப்பு மற்றும் சேவைக்கான பற்றுறுதி

தனது சுகாதார மற்றும் சமூக சேவைகளை அணுகும் அனைவருக்கும் நேர்மறையானதோர் அனுபவத்தினை அளிக்க வேண்டும் என்பதில்

'SA சுகாதாரம்' பற்றுறுதி கொண்டுள்ளது. இதைச் சாதிக்க, தனி நபர் ஒருவரை மையமாய்க் கொண்ட கவனிப்பினை முன்னேற்றுவிக்கும் சேவைகளை உங்களுக்கு வழங்க நாம் விரும்புகிறோம்.

பாதுகாப்பான, ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் உங்களது உரிமைகளையும், கௌரவத்தினையும் மதிக்கும் கவனிப்பினை வழங்க நாங்கள் விரும்புகிறோம். உங்களுக்கோ, உங்களது குடும்பத்தினருக்கோ அல்லது உங்களது கவனிப்பாளர்களுக்கோ கேள்விகள் அல்லது கரிசனங்கள் ஏதும் இருந்தால், அல்லது அறிவார்ந்த முடிவு ஒன்றை மேற்கொள்ள உங்களுக்கு உதவும் வகையில் விவாதிக்கப்படும் விடயங்களை விளங்கிக்கொள்வதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தயவு செய்து உங்களது சுகாதாரக் கவனிப்பு அணியிலுள்ள எவரொருவரையும் கேளுங்கள். தேவைப்பட்டால், மொழிபெயர்ப்பாளர் ஒருவரை ஏற்பாடு செய்ய பணியாளர்களால் இயலும்.

'சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் குறித்த முறைப்பாட்டு ஆணையர்' அவர்களது 'சுகாதார மற்றும் சமூக சேவைகள் உரிமை சாசனம்' எனும் ஆவணம் www.hcscc.sa.gov.au என்ற வலைத்தளத்தில் கிடைக்கும். உங்களுடைய உரிமைகள், மற்றும் உங்களுடைய குடும்பத்தினர், கவனிப்பாளர்கள் அல்லது உங்கள் சார்பாகச் செயல்பட நீங்கள் தெரிவு செய்துள்ள நபர்கள் ஆகியோரது உரிமைகள் என்ன என்பதை இந்த 'சாசனம்' கோடிட்டுக் காண்பிக்கிறது. உங்களது உரிமைகள் தக்க விதத்தில் கருத்தில் கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் எமது சேவைகளை நாங்கள் மேம்படுத்த விழைகிறோம்.

மனநல நோயாளர்கள், கவனிப்பாளர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோருக்கான நான்கு குறிப்பிட்ட 'உரிமைக் கூற்று' சிற்றேடுகளை 'SA சுகாதாரம்' உருவாக்கியுள்ளது. www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities எனும் வலைத்தளப்பக்கத்தில் இவை கிடைக்கும்.

‘SA சுகாதார’மானது பின்வரும் விடயங்களையும் மதித்து அவற்றின் மீது பற்றுறுதி கொண்டுள்ளது:

> எமது சுகாதார சேவைகளுக்குள்ளாக, இளவயது கவனிப்பாளர்கள் உள்ளடங்க, கவனிப்பாளர்களது பங்கு. ‘கவனிப்பாளர்களுக்கான சவுத் அவுஸ்திரேலிய சாசனம்’ எனும் ஆவணத்தினையும், சுகாதார முறைமைக்குள்ளாக கவனிப்பாளர்களது உரிமைகளைப் பற்றிய மேலதிகத் தகவல்களையும் வாசியுங்கள் www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

> ‘மன நல உரிமைகள் மற்றும் பொறுப்புகள் – தேசியக் கூற்று’ (The National Mental Health Statement of Rights and Responsibilities) www.health.gov.au எனும் வலைத்தளத்திற்குச் சென்று ‘மன நல உரிமைகள் மற்றும் பொறுப்புகள் – தேசியக் கூற்று’ (The National Mental Health Statement of Rights and Responsibilities) எனும் பக்கத்தினைத் தேடுங்கள்.

> ‘மூப்புற்ற சவுத் அவுஸ்திரேலியர்களது உரிமைகள் காப்பு யுக்தி’ (Strategy to Safeguard the Rights of Older South Australians) www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities

> ‘கவனிப்பிலுள்ள குழந்தைகள் மற்றும் இள வயதினர் உரிமைச் சாசனம்’ (Charter of Rights for Children and Young People in Care) www.gcyp.sa.gov.au/charter-of-rights-2/the-charter

> ‘சுகாதார கவனிப்பு சேவைகளில் உள்ள குழந்தைகள் மற்றும் இள வயதினரது உரிமைகள்’ (Children and Young People’s Rights in Healthcare Services) https://children.wcha.asn.au/children-and-young-peoples- rightshealthcareservices-charter

உங்களது சுகாதார கவனிப்பு – உங்களால் எப்படி உதவ இயலும்

உங்களுக்கும், உங்களுக்குக் கவனிப்பினை வழங்கும் சுகாதாரத் தொழிலர்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பின் மூலமாக சிறப்பான சுகாதாரக் கவனிப்பைனைப் பெறலாம். இன்னும் சிறந்த கவனிப்பினை நாங்கள் உங்களுக்கு வழங்க எமக்கு ஏது செய்யும் வகையில் நீங்கள் பின் வருவனவற்றைச் செய்ய வேண்டியது முக்கியம்.

> உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால், அல்லது உங்களுக்கு விளங்காத அல்லது நீங்கள் கவலைப்படும் விடயம் எதுவும் இருந்தால் அதைப் பணியாளர்களிடம் தெரிவியுங்கள்.

> உங்களுக்கான சுகாதாரத் திட்டத்தினைப் பின்பற்றுங்கள், அல்லது இதில் உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் அல்லது அப்படி உங்களால் செய்ய இயலவில்லை என்றால், உங்களுடைய சுகாதாரக் கவனிப்புத் தொழிலரிடம் இதைத் தெரிவியுங்கள்.

சுகாதாரக் கவனிப்புப் பணியாளர்களுக்கு நீங்கள் அவசியம் தெரிவிக்க வேண்டிய தகவல்கள்:

> உங்களுடைய மற்றும் குடும்பத்தினருடைய மருத்துவ வரலாறு. உங்களுக்கு இதற்கு முன்பு ஏற்பட்டிருந்த எவ்வொரு பிரச்சினைகள், சிக்கல்கள் அல்லது தீவிர எதிர்விளைவுகள் ஆகியவற்றை இது உள்ளடக்கும்.

> எவ்வொரு சிகிச்சை அல்லது நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் அல்லது எடுத்துக்கொண்டிருக்க வேண்டிய கூடுதல் மருந்து, இயற்கை மருந்து அல்லது மாற்று மருந்து எதுவும்.

> நீங்கள் பெற்று வரும் மருந்துகள் அல்லது சிகிச்சையில் உங்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகள் உள்ளடங்க உங்களது நிலையில் ஏற்படும் எவ்வொரு மாற்றமும்.

> கலாசாரம் அல்லது சமய முக்கியத்துவம் ஆகியன சம்பந்தப்பட்ட விசேடத் தேவைகள், அல்லது உடலியலாமையின் விளைவாக உங்களுக்குள்ள விசேடத் தேவைகள் எதுவும்.

பணியாளர்கள் மற்றும் இதர நோயர்களது நலனைக் கருத்தில் கொள்ளுங்கள்:

> இன்னொரு நோயாளர், உறவினர், அல்லது பணியாளர் ஒருவர் மீதான வன்முறை, தூசனம், அச்சுறுத்தல்கள் அல்லது வார்த்தைத் துஷ்பிரயோகம் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ள இயலாது.

> உங்களுடைய சந்திப்புவேளைகளைத் தவறவிடாதீர்கள். சந்திப்பிற்கு உங்களால் வர இயலவில்லையெனில், சந்திப்புவேளையை இன்னொரு நேரத்திற்கு மாற்றுவதற்குக் கூடிய விரைவில் இதை சுகாதார சேவைக்குத் தெரிவியுங்கள்.

> மற்ற நோயாளர்களது தேவைகள் மற்றும் அவர்களது அந்தரங்கத் தன்மை ஆகியவற்றிற்கு மதிப்பளியுங்கள்.
> மதுபானம், சட்டப்புறம்பு வஸ்துக்கள் அல்லது ஆயுதங்கள் எதையும் எவ்வொரு சுகாதார சேவைக்கும் கொண்டுவராதீர்கள்.
> மருத்துவமனை மற்றும் சுகாதார சேவை வளாகங்கள் அனைத்து வேளைகளிலும் புகைத் தடை உள்ள பகுதிகளாகும்.

'சுகாதார மற்றும் சமூக சேவைகள் உரிமை சாசனம்'

1. அணுகல் – சுகாதார மற்றும் சமூக சேவைகளை அணுகும் உரிமை

தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் சுகாதார மற்றும் சமூக சேவைகளை அணுகும் உரிமை அனைத்து சவுத் அவுஸ்திரேலிய மாநிலத்தவருக்கும் உண்டு.

ஒருவரது நோய்நிலை மற்றும் உங்களுக்குத் தேவைப்படும் சிகிச்சையின் அவசரம் ஆகியவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் அனைவருக்கும் சுகாதாரக் கவனிப்பு அளிக்கப்படுகிறது.

சேவைகளை அணுகுவதில் சிரமங்களை எதிர்கொள்ளும் மக்களுக்கு உதவுவதற்கான திட்டங்களை 'SA சுகாதாரம்' ஏற்படுத்தியுள்ளது. உதாரணத்திற்கு, மன நலத் தேவைகள் உள்ளவர்கள், உடலியலாமை உள்ளவர்கள், மொழி மற்றும் கல்வியறிவுத் தடைகளை எதிர்கொள்பவர்கள், பேச்சு மற்றும் செவித்திறன் குறைபாடு உள்ளவர்கள், வெவ்வேறு கலாச்சார நம்பிக்கைகளைக் கொண்டவர்கள் மற்றும் உடல் நலிந்தவர்கள் ஆகியோருக்கான திட்டங்கள் உள்ளன. சேவைகளை அணுகுவதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தயவு செய்து இதைப் பற்றி உங்களது சுகாதார சேவைப் பணியாளருடன் கலந்துரையாடுங்கள்.

விருப்பத்தெரிவு அறுவை சிகிச்சை மற்றும் காத்திருப்புப் பட்டியல்கள்

உங்களுடைய நோய் நிலையால் உயிருக்கு ஆபத்து இல்லை என்றால், விருப்பத்தெரிவு சிகிச்சை / அறுவைசிகிச்சைக்காக நீங்கள் காத்திருப்புப் பட்டியலில் ஒன்றில் வைக்கப்படலாம். சில சமூக சுகாதார சேவைகளிடமும், பல் மருத்துவ சேவைகளிடமும் கூட காத்திருப்புப் பட்டியல்கள் இருக்கும். காத்திருப்புப் பட்டியல்களைப் பற்றிய மேலதிகத் தகவல்களை www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities எனும் வலைத்தளத்தில் விருப்பத் தெரிவு அறுவைசிகிச்சைப் பகுதியில் காணலாம்.

பின் வரும் உரிமைகள் உங்களுக்குள்ளன:

> எதிர்பார்க்கப்படும் காத்திருப்புக் காலம் எவ்வளவு என்பதைத் தெரிந்துகொள்ள

> காத்திருப்புக் காலம் குறைவாக உள்ள இன்னொரு சுகாதார சேவை இருக்கிறதா, அல்லது இன்னும் துரிதமான அல்லது மாற்று சிகிச்சைக்கான மற்ற தெரிவுகள் உள்ளனவா என்று தெரிந்துகொள்ள.

உங்களது நோய்நிலை இன்னும் மோசமடைந்தால், இதைப் பற்றித் தயவு செது உங்களது பொது மருத்துவ (GP) ருடன் கலந்துரையாடுங்கள்.

பூர்வீகக்குடி சுகாதார அணிகள்

சில மருத்துவமனைகளில் 'பூர்வீகக்குடி சுகாதார அணிகள்' இருக்கும். 'பூர்வீகக்குடி சுகாதார அணி' ஒன்று அல்லது 'பூர்வீகக்குடி சுகாதாரத் தொடர்பு அதிகாரி' ஒருவர் இருக்கிறாரா என்று நீங்கள் பணியாளர்களைக் கேட்கலாம்.

மருத்துவமனை எப்படி இயங்குகிறது, என்ன நடக்கிறது என்பதைப் பற்றிய தகவல்களையும், போக்குவரத்து வசதி அல்லது தங்குமிட வசதிகளை எப்படி ஒழுங்கு செய்வது என்பதைப் பற்றிய தகவல்களையும் இவர்களால் உங்களுக்குத் தர இயலும்.

நீங்கள் மருத்துவமனையை விட்டு வெளியேறும் போது, உங்களது தேவை என்ன என்பதைப் பொறுத்து, சமூக சுகாதார சேவை கவனிப்புப் பணியாளர்கள், பூர்வீகக்குடியினர் மற்றும் டோரிஸ் நீர்ச்சந்தித் தீவக சமூகத்தினர் மற்றும் 'பூர்வீகக் குடி சமூகக் கட்டுப்பாட்டு சுகாதார சேவைகள்' ஆகியோரோடு உங்களைத் தொடர்புபடுத்த இயலும்.

பூர்வீகக்குடி சேவையைப் பயன்படுத்தும் அனைத்து உதவி தேவைப்படுவோருக்கும் ஒத்தாசை செய்வதே 'பூர்வீகக்குடி சுகாதார அணிக' ளுடைய நோக்கம் என்றாலும், கிராமப் பகுதிகளிலிருந்தும், தொலைதூரப் பகுதிகளிலிருந்தும் வரும் பூர்வீகக்குடியினர் மற்றும் டோரிஸ் நீர்ச்சந்தித் தீவக சமூகத்தினருக்கு அதியுயர் முந்துரிமை அளிக்கப்படுகிறது.

2. பாதுகாப்பு – துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை

நோயாளர்கள்/நுகர்வோர், கவனிப்பாளர்கள், தொண்டர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தனிநபர் ஒருவருக்கு அச்சுறுத்தல் அல்லது ஆபத்து எதுவுமின்றி அளிக்கப்படக்கூடிய சுகாதார சேவைகளை விரும்புகின்றனர் என்பதை 'SA சுகாதாரம்' கருத்தில் கொண்டுள்ளது.

மருத்துவமனைகளும், சுகாதார சேவைகளும் மக்களுக்குக் கவனிப்பு அளிக்கப்பட்டு அவர்கள் நோயிலிருந்து குணமடையும் இடங்களாகும். உங்களை வசதியாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருந்து பரிவும், அன்பும் மிக்க துன்பத்தைத் தணிக்கும்

கவனிப்பை உங்களுக்கு அளிக்க எம்மால் இயன்ற அனைத்தையும் நாங்கள் செய்வோம்:

> தீங்கு மற்றும் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை உங்களுக்குள்ளது
> மிகவும் குறைந்த அளவிலான கட்டுப்பாடுகளைக் கொண்ட கவனிப்பு வழங்கப்படுவதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது
> நோக்கத்தோடு செய்யப்படாத, அல்லது தற்செயலாக நேரிடும் இன்னலைக் குறைந்த பட்சமாக்கும் கவனிப்பைப் பெறும் உரிமை உங்களுக்குள்ளது

மருத்துவமனைகள் மற்றும் சுகாதார சேவைகள் ஆகியனவும் வேலைகள் நடக்கும் பணியிடங்களேயாகும்.

பணியாளர்கள், மற்ற நோயர்கள் மற்றும் வருனர்கள் ஆகியோரது நலனைத் தயவு செய்து கருத்தில் கொள்ளுங்கள். பணியாளர்கள் அல்லது நோயாளர்களின் பாதுகாப்பை அச்சுறுத்தக் கூடிய வார்த்தை ரீதியான அல்லது உடல்ரீதியான துஷ்பிரயோகம் போன்ற நடத்தை ஏற்றுகொள்ள இயலாததாகும்.

மனதைப் புண்படுத்தக்கூடிய விதத்தில் அல்லது ஆபத்தான முறையில் நடந்துகொள்பவர்கள் வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்படக் கூடும், அல்லது காவல்துறையினர் அல்லது பாதுகாப்பாளர்கள் அழைக்கப்படக்கூடும்.

எச்சரிக்கைக் குறியீடுகள் எதுவும் இருந்தால் அவற்றைப் பின்பற்றுங்கள், மற்றும் குழந்தைகளை அனைத்து வேளைகளிலும் கண்காணியுங்கள்.

உங்களுடைய இல்லத்தில் உங்களுக்கு சேவைகளை வழங்கும் பணியாளர்களுக்குப் பாதுகாப்பான சூழலில் வேலை செய்வதற்கான உரிமை உள்ளது. உங்கள் இல்லத்திற்கு வருவதற்கு முன்பாக, பணியாளர்கள் உங்களைத் தொலைபேசியில் அழைத்துப் பாதுகாப்பு சோதனை ஒன்றை மேற்கொள்வார்கள்.

3 தரம். உயர்தர சேவைகளுக்கான உரிமை

சவுத் அவுஸ்திரேலிய சுகாதார முறைமையானது ஒரு பாதுகாப்பான, நம்பகமான மற்றும் உயர்தரமான சேவையாக இருப்பதை உறுதி செய்வதில் 'SA சுகாதாரம்' பற்றுறுதி கொண்டுள்ளது.

சட்டம், தொழிலமை, நீதி நெறி, பாதுகாப்பு மற்றும் தரம் ஆகியவற்றைக் குறித்து நாங்கள் கொண்டுள்ள தர நிர்ணயங்களைப் பூர்த்தி செய்யும் கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நாங்கள் இவ்வாறு செய்கிறோம்.

பாதுகாப்பான மற்றும் உயர்தரமான கவனிப்பு வழங்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு காரியங்கள் செய்யப்படும் விதத்தினை 'SA சுகாதாரம்' தொடர்ந்து மீள்பார்வை செய்து வருகிறது. மிகச் சிறந்த சுகாதார சேவைகளை வழங்கும் நல்ல பயிற்சி பெற்ற பணியாளர்களும், வசதிகளும் எம்மிடம் உள்ளன.

உங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் எமது சுகாதார சேவைகள் இணைவாகப் பணியாற்றும் என்றும், உங்களுக்கான கவனிப்பு ஒருங்கிணைப்பு செய்யப்படும் என்றும் நீங்கள் எதிர்பார்க்கலாம்.

'உங்களது மருத்துவரிடம் செல்லுதல் – தகவல் ஏடு – உங்களது மருத்துவர் அல்லது சுகாதார சேவை வழங்குநரிடம் செல்லும் வேளையை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்' ('Visiting your doctor fact sheet – Make the most of your visit to your doctor or health provider') எனும் தகவல் ஏடு www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities எனும் வலைத்தளப்பக்கத்தில் கிடைக்கும்.

4. மதிப்பு மரியாதை – மதிப்பு மரியாதையோடு நடத்தப்படுவதற்கான உரிமை

உங்களது வயது, பாலினம், பாலியல் நாட்டம், சமயம் அல்லது கலாசாரம் எதுவாக இருப்பினும், மதிப்பு மரியாதையுடனும், கௌரவத்துடனும் நடத்தப்பட வேண்டிய உரிமை உங்களுக்குள்ளது.

உங்களுடைய சுகாதார கவனிப்பிற்கான திட்டத்தில் உங்களுடைய விருப்பங்கள், நம்பிக்கைகள் மற்றும் வழக்கமான செயல்முறைகள் ஆகியன மதிக்கப்பட்டுப் பிரதிபலிக்கப்பட வேண்டிய உரிமை உங்களுக்குள்ளது. உங்களது கௌரவத்தினைப் பணியாளர்கள் மதித்து நடப்பர்.

சுகாதார கவனிப்பு குறித்த உங்களது விருப்பங்கள் முன்கூட்டியே ஆவணப்படுத்தப்படவும், உங்களது முடிவுகள் உங்களுடைய கவனிப்பாளர்களால் மதிக்கப்படுவதற்கான உரிமையும் உஙளுக்குள்ளது.

சட்டப்படியான ஒரு 'முன்கூட்டிய கவனிப்பு உத்தரவு' (Advance Care Directive) எனும் ஆவணம் ஒன்றின் மூலமாகவோ அல்லது முறைப்படியல்லாத 'முன்கூட்டிய கவனிப்புத் திட்டங்கள்' (Advance Care Plans) மூலமாகவோ உங்களது விருப்பங்கள் ஆவணப்படுத்தப்படலாம்.

முன்கூட்டிய கவனிப்பு உத்தரவுகள்

உங்களுடைய எதிர்கால சுகாதார கவனிப்பு, வாழ்க்கையின் இறுதி நிலை, நீங்கள் விரும்பும் வாழ்க்கை ஏற்பாடுகள் மற்றும் இதர சொந்தத் தனிப்பட்ட விடயங்களை ஒரே 'முன்கூட்டிய கவனிப்பு உத்தரவுப் படிவம்' (Advance Care Directive Form) ஒன்றில் தெளிவாகவும் சட்டப்படியும் ஏற்பாடுகள் செய்வதற்கு 'முன்கூட்டிய கவனிப்பு உத்தரவு' (Advance Care Directive) உங்களுக்கு ஏது செய்யும்.

முடிவெடுப்புத் திறனில் தற்காலிகமான அல்லது நிரந்தரமான குறைபாடு ஏற்பட்டிருக்கும் காலத்தில் 'முன்கூட்டிய கவனிப்பு உத்தரவு' செல்லுபடியாகும்.

'முன்கூட்டிய கவனிப்பு உத்தரவு' ஒன்று உங்களிடமிருந்தால், தயவு

செய்து சுகாதார சேவைப் பணியாளர்களிடம் சொல்லுங்கள், மற்றும் இதன் சான்றளிக்கப்பட்ட பிரதி ஒன்றை மருத்துவமனையின் உள்ளனுமதி அணிக்கும், உங்களது மருத்துவருக்கும் மற்றும் உங்கள் சார்பாக முடிவு எடுப்பவருக்கு அல்லது எடுப்பவர்க(Substitute Decision Maker(s))ளுக்கும் கொடுங்கள்.

மேலதிகத் தகவல்களுக்கும், 'முன்கூட்டிய கவனிப்பு உத்தரவுப் படிவம்' ஒன்றை இணைய இறக்கம் செய்வதற்கும் www.advancecaredirectives.sa.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

5. தகவல்கள் – தகவல்கள் தெரிவிக்கப்படுவதற்கான உரிமை

சேவைகள், சிகிச்சைத் தெரிவுகள் மற்றும் செலவுகள் ஆகியவற்றைப் பற்றிய வெளிப்படையான, தெளிவான மற்றும் தக்க நேரத்திலான தகவல்கள் உங்களுக்கு விளங்கும் விதத்தில் உங்களுக்குத் தெரிவிக்கப்படுவதற்கான உரிமை உங்களுக்குள்ளது.

நோயாளர் என்ற முறையில், நீங்களோ, உங்களது சுகாதாரப் பிரதிநிதி[1] யோ கீழ் வருவனவற்றை எதிர்பார்க்கலாம்:

> உங்களுக்கு விளங்கக்கூடிய மொழி / வடிவத்தில் அனைத்துத் தகவல்களும் கொடுக்கப்பட வேண்டும்

> நீங்களோ அல்லது உங்கள் நிலையில் இருக்கும் நியாயமான நபர் ஒருவரோ கணிசமான அளவிலானது என்று கருதும் எந்த ஆபத்துக்களைப் பற்றியும் உங்களுக்குச் சொல்லப்பட வேண்டும், மற்றும் அந்த ஆபத்துகள் என்ன என்று உங்களுக்கு விளக்கிச் சொல்லப்பட வேண்டும்

> உங்களுடைய சுகாதார கவனிப்பைக் குறித்து அறிவார்ந்ததொரு முடிவினை நீங்கள் மேற்கொள்ளும் வகையில், எப்படிப்பட்ட சிகிச்சையை உங்களது சுகாதாரத் தொழிலர் உங்களுக்குப் பரிந்துரைக்கிறார் என்றும், தகுந்த மாற்றுச் சிகிச்சைகள் ஏதும் இருக்கின்றனவா என்றும் உங்களுக்கு சொல்லப்பட வேண்டும்

> ஆபத்துகள் உள்ளடங்க, சோதனைகளைப் பற்றிய தகவல்கள் உங்களுக்குக் கொடுக்கப்படவும், சோதனை முடிவுகளைப் பற்றியும், முடிவுகளின் விளைவுகளைப் பற்றியும் உங்களுக்கு விளக்கிச் சொல்லப்படவும் வேண்டும்

> உங்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை அல்லது மருந்துகளின் நோக்கம், அதன் ஆதாயங்கள், மற்றும் ஏற்படவல்ல பக்கவிளைவுகள் ஆகியவற்றை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்

1. 'பிரதிநிதி' என்பவர் நியமிக்கப்பட்ட 'முடிவெடுக்கும் மாற்றுநபர்' (Substitute Decision Maker), 'பொறுப்பாளர்' (Person Responsible) அல்லது குழந்தை ஒன்றின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆவார்

- சிகிச்சை வெற்றியடைவதற்கான வாய்ப்புக்கள், மேலதிக சிகிச்சை எதற்கும் உள்ள தேவை, நல்ல உடல்நிலைக்குத் திரும்புவதற்கான, குணமுறுவதற்கான சாத்தியம் மற்றும் மறுவாழ்வுத் தேவைகள் ஆகியவற்றைப் பற்றிய விளக்கம் உங்களுக்குத் தரப்படவேண்டும்
- தவறுகள் ஏதும் ஏற்பட்டுவிட்டாலோ அல்லது நீங்கள் எதிர்பார்த்ததைப் போல நடக்காவிட்டாலோ என்ன செய்யப்படும் என்பதைப் பற்றிய தெளிவான விளக்கம் உங்களுக்குத் தரப்படவேண்டும்
- எந்த நேரத்திலும் நீங்கள் உங்களது மனதை மாற்றிக் கொள்ளலாம் அல்லது ஒரு சோதனை அல்லது சிகிச்சை வேண்டாம் என்று மறுக்கலாம், மற்றும் ஒரு சோதனை அல்லது சிகிச்சை வேண்டாம் என்று மறுப்பதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி உங்களுக்கு விளக்கிச் சொல்லப்படவேண்டும்.
- தரப்படும் சிகிச்சை சோதனைக் கட்டத்திலானதா அல்லது ஒரு ஆய்வில் பயன்படுத்தப்படுகிறதா என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்
- மருத்துவமனையில் அல்லது இன்னொரு சுகாதார சேவையில் நீங்கள் இருக்கவேண்டிய தேவையை உங்களது நோய்நிலை ஏற்படுத்தவில்லை என்று உங்களுக்கு சிகிச்சியளிக்கும் மருத்துவர் கருதினால், மருத்துவமனையை விட்டு நீங்கள் அகலுவதற்கு முன்பாக உங்களுடன் கலந்துரையாடப்படவும், மருத்துவமனையை விட்டு அகலும் திட்டம் ஒன்று உங்களுக்குத் தரப்படவும் வேண்டும்
- உங்களுக்கு உதவக்கூடிய உள்ளூர் சுகாதார சேவைகள், விசேடக் குழுக்கள், உதவி சாதனங்கள், உபகரணங்கள் மற்றும் சேவைகளைப் பற்றிய தகவல்கள் உங்களுக்குத் தரப்படவேண்டும்
- இன்னொரு மருத்துவமனை அல்லது சுகாதார வசதியில் இன்னும் தகுந்த கவனிப்பு உங்களுக்குக் கிடைக்கும் என்று உங்களுக்கு சிகிச்சியளிக்கும் மருத்துவர் கருதினால், இன்னொரு மருத்துவமனை அல்லது சுகாதார வசதிக்கு நீங்கள் மாற்றப்படவேண்டும்.

பொது மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவமனை நோயாளர்

உங்களிடம் தனியார் சுகாதாரக் காப்பீட்டு வசதி இருந்தாலும் இல்லையென்றாலும், பொது மருத்துவமனை ஒன்றில் நீங்கள் இருக்கும்போது, பொது நோயாளர் அல்லது தனியார் நோயாளர் என்ற முறையில் உங்களுக்கு சிகிச்சையளிக்கப்பட வேண்டுமா என்பதை நீங்கள் தெரிவு செய்யும் உரிமை உங்களுக்கு உள்ளது. உங்களது விருப்பம் என்ன என்பதை எழுத்து மூலமாக மொழியுமாறு பணியாளர்கள் உங்களைக் கேட்பர்.

உங்களுடைய முடிவு எதைக் குறிக்கிறது என்பதையும், உங்களது விருப்பத்தின் காரணமாக ஏற்படும் பணரீதியான விளைவுகள் என்ன என்பதையும் தெரிந்துகொள்ளும் உரிமை உங்களுக்குள்ளது.

பொது நோயாளர் என்ற வகையில், உங்களுக்கான மருத்துவரை உங்களால் தெரிவு செய்ய இயலாது, மற்றும் மருத்துவமனையால் ஒதுக்கப்படும் மருத்துவரால் அல்லது மருத்துவர்களால் நீங்கள் சிகிச்சையளிக்கப்படுவீர்கள். (பல் மருத்துவ சேவைகளை உள்ளடக்கிய சில சுகாதார சேவைகளுக்கும், நாட்டுப்பகுதி அவசரசிகிச்சைப் பிரிவுகளுக்கும் கட்டணங்கள் உள்ளன).

தனியார் சுகாதாரக் காப்பீட்டு வசதி உள்ள ஒரு நோயாளர் பொது நோயாளியாகச் சிகிச்சையளிக்கப்படத் தெரிவு செய்யலாம்.

உங்களால் பெயர் மொழியப்படும் மருத்துவர் அல்லது மருத்துவர்களுக்கு நீங்கள் இருக்கும் மருத்துவமனையில் பணியாற்றும் அதிகாரம் இருந்தாலும், அந்த மருத்துவமனையில் வைத்து உங்களுக்குச் சிகிச்சையளிக்க அவர்(கள்) சம்மதித்தாலும், தனியார் நோயாளர் என்ற முறையில் உங்களால் பெயர் மொழியப்படும் மருத்துவர் அல்லது மருத்துவர்களால் நீங்கள் சிகிச்சையளிக்கப்படுவீர்கள். தனியார் நோயாளர்களுக்கு ஆகும் கட்டணங்கள் அனைத்தையும் செலுத்தவேண்டிய பொறுப்பு அவர்களுடையதேயாகும்.

‘மெடிகெயர்’ வசதிக்கு நீங்கள் தகுதி பெறவில்லை என்றால், அல்லது நஷ்ட ஈட்டுக் கோரல் ஒன்றில் நீங்கள் சம்பந்தப்பட்டிருந்தால் ‘மாற்று நோயாளார் தெரிவு’ (alternative patient election) மற்றும் கட்டணம் செலுத்தும் ஏற்பாடுகள் ஆகியன செல்லுபடியாகும்.

கட்டணங்கள் மற்றும் நிதியுதவி

பொது மருத்துவமனை ஒன்றில், பொது நோயாளராக இலவசமாகச் சிகிச்சையளிக்கப்பட ‘மெடிகெயர்’ அட்டை வைத்திருக்கும் அனைத்து அவுஸ்திரேலிய வாசிகளுக்கும் தகுதியுண்டு. பெரும்பான்மைத் தருணங்களில், சவுத் அவுஸ்திரேலியப் பொது சுகாதார முறைமை முழுவதிலும் பொது நோயாளர்களுக்கு சேவைகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன. கட்டணங்கள் எதையும் நீங்கள் அவசியம் செலுத்தியாக வேண்டும் என்றால், இது முன்கூட்டியே உங்களுக்குத் தெரிவிக்கப்படும், மற்றும் உங்களுக்கானக் கணக்கு ஒன்று உங்களுக்குத் தரப்படும்.

கீழ் வரும் கட்டணங்களை நீங்கள் செலுத்தவேண்டி இருக்கலாம்:

> மருத்துவமனை/சுகாதார சேவையால் உங்களுக்குக் கொடுக்கப்படும் மருந்துகளுக்காக ஒரு கூட்டு–செலுத்துத்தொகை

> 35 நாட்களுக்கும் மேலாக நீங்கள் மருத்துவமனையில் இருந்தால், அந்த மேலதிக நாட்களுக்கான தொகை

> உங்களது சிகிச்சைக்காகத் தேவைப்படும் சில குறிப்பிட்ட வகையான உபகரணங்கள்.

ஒரு தனியார் நோயாளராகச் சிகிச்சையளிக்கப்பட நீங்கள் தெரிவு செய்தால், கீழ் வரும் கட்டணங்களை நீங்கள் செலுத்தவேண்டியிருக்கும்:

> மருத்துவமனையில் தங்குவதற்கானக் கட்டணங்கள்
> மருத்துவ செலவு, நோயறிவுச் செலவு, செயற்கை உறுப்பு மற்றும் சாதனச் செலவுகள், உதவி உபகரனங்கள் மற்றும் சாதனங்கள் மற்றும் பல் மருத்துவ சேவைகள் ஆகியவற்றிற்கான கட்டணங்கள்.

இக் கட்டணங்கள் உங்களது தனியார் காப்பீட்டாளரால் ஈடு செய்யப்படலாம், ஆனாலும், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பாக உங்களுடைய காப்பீட்டு சேவையுடன் நீங்கள் இதைப் பற்றிக் கலந்துரையாட வேண்டியது அவசியம்.

வெளிநாட்டு வருனர்கள், அல்லது தற்காலிக விசா வைத்திருப்பவர்களுக்கு வேறு மாதிரியான கட்டண ஏற்பாடுகள் செல்லுபடியாகும்.13 20 11 –இல் 'மெடிகெயர்' சேவையை அழைத்து, அல்லது 1800 724 457 – இல் 'ஆஸ்ஹெல்த்' (AusHealth) –ஐ அழைத்து, அல்லது info@aushealth.com.au எனும் முகவரிக்கு மின்னஞ்சல் செய்து உங்களது தகுதியை நீங்கள் சோதித்துக் கொள்ளலாம்.

SA ஆம்புலன்ஸ் சேவை

அவசரகால மருத்துவ உதவி மற்றும் சிகிச்சை, போக்குவரத்து, அவசரமல்லாத நோயாளர் போக்குவரத்து மற்றும் உயர்தர நோயாளர் கவனிப்பு ஆகிய சேவைகளை சவுத் அவுஸ்திரேலிய மாநிலத்தவருக்கு 'SA ஆம்புலன்ஸ் சேவை' அளிக்கிறது.

ஆம்புலன்ஸ் சேவைகளுக்கு நீங்கள் கட்டணம் ஒன்று செலுத்த வேண்டியிருக்கலாம். ஆம்புலன்ஸ் சேவைகளுக்கு ஆகும் செலவுகளை 'மெடிகெயர்' ஈடு செய்யாது, மேலும் போக்குவரத்து வசதியை உங்களுக்கு அளிப்பதற்கு முன்பாக இந்தக் கட்டணத்தைக் குறித்து உங்களுக்கு அவர்களால் அறிவிக்க இயலாது.

ஆம்புலன்ஸ் சேவைக்கு ஆகும் செலவுகளை தனியார் சுகாதார காப்பீட்டு நிதிகள் ஈடுகட்டக்கூடும். உங்களது தனியார் சுகாதார காப்பீட்டு நிதியிடம் இதைப் பற்றிச் சோதித்துக் கொள்ளுங்கள்.

மருத்துவமனையை விட்டு நீங்கள் அகலும்போது உங்களுக்கு ஆம்புலன்ஸ் தேவைப்பட்டால் இத்தோடு சம்பந்தப்பட்ட செலவுகளைச் செலுத்துமாறு உங்களிடம் கேட்கப்படும்.

சுயவிருப்பற்ற சிகிச்சை உத்தரவு அல்லது 'மன நல சட்டம் 2009' –இன் 'பிரிவு 56'–இன் கீழ் வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கான 'SA ஆம்புலன்ஸ் சேவை'க் கட்டணத்தினை அவர்களது 'உள்ளூர்ப்பகுதி சுகாதாரப் பணிவலை' செலுத்தக்கூடும்.

கட்டணங்களில் உதவுவதற்காக, 'SA ஆம்புலன்ஸ் சேவை'யானது ஆம்புலன்ஸ் காப்பீட்டு வசதியை வழங்குவதில்லை. www.saambulance.com.au எனும்

வலைத்தளத்தில் மேலதிகத் தகவல்களைக் காணலாம், அல்லது 1300 13 62 72 எனும் இலக்கத்தினை அழையுங்கள்.

அவசரநிலை ஒன்றில் 'SA ஆம்புலன்ஸ் சேவை' –யுடன் தொடர்புகொள்ள '000' –வை அழையுங்கள்.

நோயாளர் போக்குவரத்து உதவித் திட்டம் (PATS)

கிராமப்புற அல்லது தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் சவுத் அவுஸ்திரேலியர்கள் தமக்கு மிக அண்மையிலுள்ள சிகிச்சையளிக்கும் சிறப்பு மருத்துவரைப் பார்க்க 100 கிலோ மீட்டருக்கும் அதிகமாகப் பயணம் செய்யும்போது, பயணச் செலவு, அழைத்துச் செல்வதற்கு ஆகும் செலவு மற்றும் தங்குமிடச் செலவு ஆகியவற்றில் சிறிதைக் கொடுப்பதற்காக உள்ள தள்ளுபடித் திட்டமே 'நோயாளர் போக்குவரத்து உதவித் திட்டம் (PATS)' என்பதாகும். PATS தள்ளுபடி ஒன்றைப் பெற நீங்கள் செய்யவேண்டியது:

> உதவியைப் பெறும் தகுதி உங்களுக்கு இருக்கிறது என்பதை உங்களது உள்ளூர்ப்பகுதி PATS அலுவலகத்தில் சோதித்து அறிந்துகொள்ளுங்கள்

> விண்ணப்பப் படிவத்தினை உங்களுக்கு அனுப்புமாறு உங்களது உள்ளூர்ப்பகுதி PATS அலுவலகத்தினைக் கேளுங்கள், அல்லது வலைத்தளத்திலிருந்து படிவம் ஒன்றை இறக்கம் செய்துகொள்ளுங்கள்.

உங்களது உள்ளூர்ப்பகுதி PATS அலுவலகத்தைப் பற்றிய தகவல்கள் மற்றும் அதன் தொடர்பு விபரங்களை www.sahealth.sa.gov.au/PATS –யில் காணலாம், அல்லது 08 8226 7215 எனும் இலக்கத்தினை அழையுங்கள்.

6. பங்கேற்பு – செயலூக்கத்துடன் பங்கேற்பதற்கான உரிமை

முடிவுகளை மேற்கொள்ளும்போது, அல்லது உங்களுக்கான கவனிப்பு, சோதனைகள் மற்றும் சிகிச்சை ஆகியவற்றிற்கான உங்களது சம்மதத்தினை அளிக்கும்போது, பின் வரும் உரிமைகள் உங்களுக்குள்ளன:

> உங்களுடைய கவனிப்பைப் பற்றிய அனைத்து முடிவுகளிலும் டுபாடு கொள்ள, மற்றும் என்ன நடக்கக்கூடும் என்பதை விளங்கிக்கொள்ளும் பொருட்டு கேள்விகள் கேட்க

> உங்களது குடும்பத்தினர், நண்பர்கள், கவனிப்பாளர்கள் அல்லது 'முடிவெடுக்கும் மாற்று நபர்' (Substitute Decision-Maker[2]) ஆகியோருடன் உங்களது சுகாதாரக் கவனிப்பு மற்றும் சிகிச்சைத் தெரிவுகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு நேரம் கொடுக்கப்பட

2. உங்களால் இயலாதபோது உங்கள் சார்பாக முடிவுகளை எடுக்கும் நபர் அல்லது நபர்கள் 'முடிவெடுக்கும் மாற்று நபர்' என்று அழைக்கப்படுவர்.

- உங்களுடைய நோயறிவுச் சோதனை மற்றும் சிகிச்சை ஆகியவற்றிற்கான தெரிவுகளைப் பற்றிய இரண்டாம் கருத்து மற்றும்/அல்லது தகவல்கள் வேண்டும் எனக் கேட்க
- சுகாதாரத் தொழிலரது அறிவுரையை ஏற்காததன் காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றிய விளக்கம் ஒன்று கொடுக்கப்பட
- உங்களால் இயலாதபோது உங்கள் சார்பாக முடிவெடுக்க 'முடிவெடுக்கும் மாற்று நபர்' ஒருவரை நியமிக்க
- முடிவெடுக்கும் திறன் உங்களுக்கு இருக்கும்போது உங்களது கவனிப்பு அல்லது சிகிச்சையைப் பற்றிய முடிவை நீங்கள் எடுப்பதில் ஆதரவு அளிக்கப்பட. முடிவெடுக்கும் திறன் உங்களுக்கு இல்லை என்றால், உங்களுடைய 'முடிவெடுக்கும் மாற்று நபர்' அல்லது 'பொறுப்பாளி'[3] –யுடன் அவர்கள் கிடைக்கும் பட்சத்திலும், உங்கள் சார்பாக முடிவு ஒன்றை எடுக்க அவர்கள் விரும்பும் பட்சத்திலும் தொடர்புகொள்ளப்படும்.
- வாழ்நாள் முழுதும் நீடிக்கும் சிகிச்சை வேண்டாம் என்று மறுக்க, மற்றும் மாறாக, நோவுதணிப்பு கவனிப் (palliative care) பைப் பெற
- மருத்துவ ஆய்வுகள் அல்லது சோதனைகளில் பங்கேற்க மறுக்க
- 'மன நல சட்டம் 2009' –இன் கீழ், சமூக உத்தரவு அல்லது நோயாளர் சிகிச்சை உத்தரவு ஒன்றிற்கு நீங்கள் உட்பட்டு இருந்தாலொழிய, அல்லது 'சவுத் அவுஸ்திரேலிய குடிமை மற்றும் நிர்வாக முறைமன்றம்' (South Australian Civil and Administrative Tribunal) (முன்பாக பாதுகாவல் அமைப்பு' (Guardianship Board) எனப்பட்டது) என்பதன் 'பாதுகாவல் மற்றும் நிர்வாக சட்டம் 1993' –இன் 'பிரிவு 32' –இன் கீழ் நீங்கள் இருப்பதால் சிகிச்சைக்காக மருத்துவமனை ஒன்றில் இருந்தாகவேண்டும் என்று நீங்கள் வேண்டப்பட்டாலொழிய, உங்களுடைய சொந்தப் பொறுப்பில் சுகாதார சேவையிலிருந்து எந்த நேரத்திலும் நீங்களாகவே வெளியேற.

சம்மதம்

மருத்துவ சிகிச்சை அல்லது சோதனையை மேற்கொள்ள நீங்கள் சம்மதித்திருக்கிறீர்கள் என்றும், இவற்றைப் பற்றி உங்களுக்கு விளக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது என்றும் கூறி சம்மதப் படிவம் ஒன்றில் கையொப்பம் இடுமாறு உங்களிடம் கேட்கப்படலாம். மருத்துவ சிகிச்சை அல்லது உடல்நலக் கவனிப்பிற்கு சம்மதமளிக்கும் திறன் உங்களுக்கு இருக்கிறதா என்று தீர்மானிக்க வேண்டியது உங்களது சுகாதாரத் தொழிலரது பொறுப்பாகும்.

சில சூழ்நிலைகளில், உங்களுடைய உயிருக்கு அல்லது உடல்நலத்திற்கு உடனடி ஆபத்து இருந்தால், உங்களது சம்மதம் இல்லாமலேயே உங்களுக்கு அவசர மருத்துவ சிகிச்சையளிக்கப்படக் கூடும்.

3. ஒரு குடும்ப உறுப்பினர், நெருங்கிய நண்பர் அல்லது கலாசார ரீதியாக ஏற்றுகொள்ளத் தக்க அதே சமூகத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் 'பொறுப்பாளி' என்று அழைக்கப்படுவார்.

மருத்துவ சிகிச்சைக்கு சம்மதம் அளிக்க நீங்கள் மறுக்கிறீர்கள் என்று நீங்கள் ஏற்கனவே சுட்டிக் காண்பித்திருந்தாலொழிய, அல்லது அந்த நேரத்தில், அவசர மருத்துவ சிகிச்சைக்கு உங்கள் சார்பாக சம்மதம் அளிப்பதற்கு பிரதிநிதி ஒருவர் இருந்தாலொழிய, இப்படி நடக்கக் கூடும்.

மாணவர்கள்

மருத்துவம் மற்றும், தாதியம் பயிலும் மாணவர்கள் மற்றும் சுகாதாரத் துறை சம்பந்தப்பட மாணவர்கள் அடிக்கடி வருவார்கள், மற்றும் பொது மருத்துவமனைகளில் உங்களுடைய சம்மதத்துடன் மேற்பார்வையின் கீழ் அவர்கள் சிகிச்சையளிக்கக் கூடும். இது அவர்களுடைய கல்வியில் முக்கியமானதொரு பாகமாகும்.

மன நல நுகர்வோர்

மற்ற எவரையும் போல, சிகிச்சை மற்றும் கவனிப்பைப் பெறுவதற்கான அதே உரிமைகள் உங்களுக்கும் உள்ளன.

‘மன நல சட்டம் 2009’ –இன் கீழ், சமூக சிகிச்சை ஒன்றிற்கு அல்லது உள்நோயாளர் சிகிச்சை ஒன்றிற்கு நீங்கள் உட்படுத்தப்பட்டிருந்தால் உங்களுடைய சம்மதல் இல்லாமல் உங்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட முடியும்.

சிகிச்சையானது, தகுந்த முறையில் மிகக் குறைந்த காலத்திற்கானதாகவும், மிகவும் குறைந்த கட்டுப்பாட்டுகள் உள்ளதாகவும் இருக்க வேண்டும். இது நீங்கள் குணமடைவதை மையமாய்க் கொண்டதாக இருத்தல் வேண்டும், மற்றும் ‘முன்கூட்டிய கவனிப்பு உத்தரவு’ அல்லது ‘கூட்டு – முன் ஒப்பந்தம்’[4] (Ulysses Agreement[4]) ஒன்றின் மூலமாக நீங்கள் வெளிப்படுத்தியிருக்கும் உங்களது விருப்பங்களை கருத்தில் கொள்வதாக இருத்தல் வேண்டும்.

உங்களால் இயலவில்லை என்றால், உங்களுடைய ‘முடிவெடுக்கும் மாற்று நபர்’ அல்லது ‘பொறுப்பாளி’யால் முடிவுகளை எடுக்க இயலும்.

மன நல சேவைகளில் உள்ள ‘நேரடி அனுபவப் பணியாளர்கள்’

மன நல நோயாளர்கள் / மன நல சேவை நுகர்வோர்கள் அல்லது இவர்களுடைய கவனிப்பாளர்கள் ‘நேரடி அனுபவப் பணியாளர்கள்’ (Lived Experience Workers) என்று சொல்லப்படுவார்கள். அனைத்துத் தீவிர மன நலக் கவனிப்புப் பிரிவுகளிலும் ‘நேரடி அனுபவப் பணியாளர்கள்’ உள்ளனர், மேலும் உங்களுக்கும், உங்களது குடும்பதினர் மற்றும் நண்பர்களுக்கும் தகவல்களையும் ஆதரவுதவியையும் இவர்களால் அளிக்கவியலும்.

4. மன நோய் காரணமாக பெற்றோர் சுகவீனமடையும்போது, குழந்தைகளின் கவனிப்பைப் பற்றி குடும்பத்தினராலும், சம்பந்தப்பட்ட மன நலத் தொழிலர்களாலும் உருவாக்கப்படும் திட்டம் ‘கூட்டு – முன் ஒப்பந்தம்’ (Ulysses Agreement) எனப்படும்.

குழந்தைகள்

ஒரு குழந்தையின் பெற்றோர்[5] அல்லது பாதுகாவலர் என்ற முறையில், உங்கள் குழந்தையின் சார்பாக முடிவுகளை மேற்கொள்ளும் உரிமை உங்களுக்குள்ளது. மருத்துவ அவசரநிலைகள் அல்லது வேறு மருத்துவக் காரணங்களை முன்னிட்டு தனிமை தேவைப்பட்டாலொழிய, மருத்துவமனையில் அல்லது எவ்வொரு சுகாதார சேவையிலும் நீங்கள் உங்கள் குழந்தையுடன் இருக்கலாம். தமது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களை தங்களுடன் வைத்துக்கொள்ளும் உரிமை குழந்தைகளுக்கும் உள்ளது.

குழந்தைகளுக்கு வயதாகும்போது (16 வயதிற்கும் மேல் ஆகும்போது) தம்முடன் கலந்தாலோசிக்கப்படுவதற்கும், தம் சார்பாகத் தாமே முடிவுகளை மேற்கொள்வதற்குமான உரிமை குழந்தைகளுக்கு உள்ளது. ஒரு குழந்தை சம்மதித்தாலும், சிகிச்சையை விளங்கிக்கொள்ளும் திறன் குழந்தைக்கு இருக்கிறது என்று சுகாதாரத் தொழிலர் திருப்திப்பட்டாலும், மற்றும் இன்னொரு சுகாதாரத் தொழிலர் அக் கருத்தினை ஆமோதித்தாலும், 16 வயதிற்கும் கீழ்ப்பட்ட குழந்தை ஒன்றிற்கு சுகாதாரத் தொழிலர் ஒருவர் மருத்துவ சிகிச்சை அளிக்கலாம்.

7. அந்தரங்கத் தன்மை – அந்தரங்கம் மற்றும் தகவல் பாதுகாப்பிற்கான உரிமை

உங்களுடைய அந்தரங்கத் தன்மையும், தகவல் பாதுகாப்பிற்கான உரிமையும் அனைத்து வேளைகளிலும் மதிக்கப்படும்.

சிகிச்சை மற்றும் சேவைகளை உங்களுக்கு வழங்குவதற்காக 'SA சுகாதார' த்தினால் உங்களைப் பற்றிய தகவல்கள் திரட்டப்படும்.

உங்களைப் பற்றிய தகவல்கள் பாதுகாப்பாக வைக்கப்படும், மற்றும் உங்களுடை கவனிப்பில் சம்பந்தப்பட்டவர்களால் மட்டுமே உங்களைப் பற்றிய தகவல்களை அணுக இயலும்.

சில தகவல்களைக் கொடுக்க நீங்கள் மறுக்கலாம், ஆனால் இதன் காரணமாக உங்களது கவனிப்பு அல்லது சிகிச்சையின் மீது தாக்கம் ஏற்படக்கூடும்.

சட்டப்படியான தடை ஒன்று இருந்தாலொழிய, உங்களைப் பற்றிய உடல்நலப் பதிவுகளை வேண்டி அணுகும் உரிமை உங்களுக்குள்ளது.

5. இதில் மாற்றாம் –பெற்றோர்கள், அல்லது குழந்தைக்கான 'பெற்றோர் ஸ்தானிகள்' (loco parentis) எனும் ரீதியில் செயல்படக் கூடிய வயதுவந்த நபர்(கள்), அதாவது குழந்தைக்கான அன்றாடப் பெற்றோர் பொறுப்புக்களைக் கொண்டுள்ள நபர் – உதாரணத்திற்கு, குழந்தையின் பெற்றோர்கள் சார்பாக குழந்தையைக் கவனித்துவரும் பாட்டன் – பாட்டியார் போன்றவர்கள் – ஆகியோர் இதில் உள்ளடங்குவர்.

உங்களது உடல்நலப் பதிவிலுள்ள தகவல்கள் தவறானதாகவோ, காலம் கடந்ததாகவோ அல்லது தவறான வழியில் இட்டுச் செல்வதாகவோ இருந்தால், அந்தப் பதிவு திருத்தப்பட வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். இதை எப்படிச் செய்வது என்று சுகாதார சேவைப் பணியாளர்களைக் கேளுங்கள்.

உங்களைப் பற்றிய தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படக் கூடிய தருணங்கள்

நீங்கள் பெற்றுவரும் கவனிப்பைப் பற்றி ஓருவரோடொருவர் கலந்துரையாட சுகாதாரத் தொழிலர்கள் உங்களது உங்களது உடல்நலப் பதிவுகளைப் பயன்படுத்தலாம். மற்ற நபர்கள் அல்லது சேவை வழங்குனர்களுக்கு உங்களைப் பற்றிய தகவல்கள் எப்போது வெளிப்படுத்தப்படக்கூடும் என்பதை 'சுகாதார கவனிப்பு சட்டம் 2008' மற்றும் 'மன நல சட்டம் 2009' ஆகிய சட்டங்கள் கோடிட்டுக் காண்பிக்கின்றன.

உஙகளுடைய சம்மதத்துடன் உங்களைப் பற்றிய சொந்தத் தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படலாம்:

> உங்களுடைய தனியார் சுகாதாரக் காப்பீட்டு நிதியுடன், அல்லது
> 'பணிக்காப்பு' (WorkCover) அல்லது 'மோட்டார் வாகன விபத்து ஆணையம்' (Motor Accident Commission) போன்ற மூன்றாம் தரப்பினர் ஒருவருடன்

சில சமயங்களில் உங்களுடைய சம்மதம் இல்லாமல் உங்களைப் பற்றிய விபரங்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துமாறு 'SA சுகாதாரம்' வேண்டப்படலாம் அல்லது அதற்கு அதிகாரம் அளிக்கப்படலாம். கீழ்வருவனவற்றை மட்டுப்படுத்த அல்லது தடுக்கத் தேவைப்படும் சூழ்நிலைகளை இது உள்ளடக்கலாம்:

> பாரிய உயிர் அச்சுறுத்தல்
> குழந்தைத் துஷ்பிரயோகம்
> இல்ல அல்லது குடும்ப வன்முறை, அல்லது
> உங்களது பொதுநலன் அல்லது/மற்றும் மற்றவர்களுடைய பாதுகாப்பு ஆகியவற்றைக் காபந்து செய்ய.

சுகாதார சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு தகவல்களைப் பயன்படுத்துதல்

சுகாதார சேவைகளை மேம்படுத்தவும், எதிர்கால சேவைகளுக்காகத் திட்டமிடவும், அல்லது ஆய்வுகளுக்காகவும் உங்களுடைய சுகாதாரக் கவனிப்பைப் பற்றிய தகவல்களை 'SA சுகாதாரம்' பயன்படுத்தக்கூடும். இது நிகழ்ந்தால், உங்களை அடையாளம் காட்டக்கூடிய சொந்தத் தனிநபர் தகவல் எதுவும் பயன்படுத்தப்படும் தகவல்களில் உள்ளடங்காது.

உங்களைப் பற்றிய தகவல்கள் நியாயமற்ற முறையில் பகிர்ந்துகொள்ளப்பட்டதாகவோ அல்லது அணுகப்பட்டதாகவோ நீங்கள் கருதினால், உங்களுடைய சுகாதார சேவையுடன் நீங்கள் இதைப் பற்றி விவாதிக்கலாம், அல்லது 'சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் முறைப்பாட்டு ஆணையர்' (Health and Community Services Complaints Commissioner) (தொடர்பு விபரங்களுக்குப் பக்கம் 24–ஐப் பார்க்க) அவர்களிடம் அல்லது 'சவுத் அவுஸ்திரேலிய தகவல் பாதுகாப்புக் குழு' (Privacy Committee of South Australia) வினரிடம் முறைப்பாடு செயலாம்.

'தகவல் பாதுகாப்புக் குழு'வுடன் 08 8204 8786 எனும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

வேண்டுமென்றே செய்யப்படும் அல்லது தகாத விதத்திலான உங்களது சுகாதாரப் பதிவுகள் மீதான அணுகல் எதுவும் மிகவும் வினயமான முறையில் எடுத்துக்கொள்ளப்படும். இப்படி நிகழ்ந்தால் உங்களுடன் தொடர்பு கொள்ளப்படும்.

8. கருத்துரைப்பு – கருத்துரைப்பதற்கும் மற்றும்/ அல்லது முறைப்பாடு செய்வதற்கும் உள்ள உரிமை

நோயாளர்கள்/நுகர்வோர்கள், குடும்பங்கள், கவனிப்பாளர்கள் மற்று சமூகத்தினரைத் தமக்குக் கருத்துரைகளை அளிக்குமாறு 'SA சுகாதாரம்' ஊக்குவிக்கிறது. கருத்துரைகள், பாராட்டுகள், முறைப்பாடுகள் மற்றும் யோசனைகள் ஆகியன எமது சேவைகளை மேம்படுத்த எமக்கு உதவும்.

பின் வரும் உரிமைகள் உங்களுக்குள்ளன:

> உங்களது உடல்நல கவனிப்பு மற்றும் அனுபவம் குறித்துக் கருத்துரைக்க மற்றும் கேள்விகள் கேட்க

> திட்டமிட்டவாறு உங்களுடைய சுகாதார கவனிப்பு அளிக்கப்படவில்லை என்று நீங்கள் கருதினால், அதை நீங்கள் எமக்குத் தெரிவிக்க

> உங்களது கரிசனங்கள் அல்லது முறைப்பாடுகள் ஆகியவை முறையாகக் கவனிக்கப்பட, மற்றும் விளக்கம் மற்றும் மன்னிப்புக்கோரல் ஆகியன உங்களுக்கு அளிக்கப்பட

> உங்களது யோசனைகளை எமக்கு அளிக்க.

உங்களுடைய கருத்துரையை சுகாதார சேவை ஒன்றிற்கு அளிக்கும் விதம்:

> சுகாதார சேவையில் உங்களைக் கவனித்துவரும் பணியாளர் ஒருவரிடம் உங்களது கரிசனங்களை வெளிப்படுத்துங்கள். சுகாதார சேவையினை நீங்கள் தொலைபேசியிலும் அழைக்கலாம் அல்லது அவர்களுக்கு எழுதலாம்.

> உங்கள் கரிசனத்திற்குத் தீர்வு காணப்படவில்லை எநன்று நீங்கள் நினைத்தால், 'நுகர்வோர்/நோயாளர் அறிவுரையாளர்' (Consumer/Patient Advisor) 'நோயாளர் கருத்துரை ஒருங்கிணைப்பாளர்' (Patient Feedback Coordinator) அல்லது 'தர ஒருங்கிணைப்பாளர்' (Quality Coordinator) (நாட்டுப்பகுதி சேவைகளில்) ஆகியோருடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம். www.sahealth.sa.gov.au/yourrightsandresponsibilities எனும் வலைத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

அனைத்து நிகழ்வுகளையும், அதிர்ஷ்டவசமாகக் கடைசி நேரத்தில் தவிர்க்கப்பட்ட நிகழ்வுகளையும் நாங்கள் முக்கியமான விடயங்களாக எடுத்துக்கொள்வோம். கவனிப்பை எவ்வாறு மேம்படுத்துவது மற்றும் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை எப்படித் தடுப்பது என்று அறிந்துகொள்ள இவற்றை நாங்கள் பயன்படுத்துகிறோம். நீங்கள் சம்பந்தப்பட்டுள்ள எவ்வொரு விடயங்களும் ஒளிவு மறைவற்ற, தெளிவான முறையில் நிர்வகிக்கப்படும்.

உங்களது கருத்துரைக்குக் கிடைக்கும் மறுமொழியில் உங்களுக்குத் திருப்தியில்ல என்றால், முறைப்பாட்டு ஆதரவுரை வழங்கும் சுதந்திர அமைப்புக்களுடன் நீங்கள் தொடர்புகொள்ளலாம். இந்த அமைப்புக்களில் உள்ளடங்குவன:

'சுகாதார மற்றும் சமூக சேவைகள் முறைப்பாட்டு ஆணையர்'

சவுத் அவுஸ்திரேலிய மாநிலத்தில் உள்ள சுகாதார அல்லது சமூக சேவைகளைப் பற்றிய முறைப்பாடுகளில் மக்களுக்கு (சேவைகளைப் பாவிப்போர், கவனிப்பாளர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் ஆகியோருக்கு) உதவும் ஒரு சுதந்திர அமைப்பாகும் இது.

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

தொலைபேசி 08 8226 8666, அல்லது

நாட்டுப்பகுதி இலவச அழைப்பு 1800 232 007

www.hcscc.sa.gov.au

'உடலியலாமை மற்றும் மன நல சமூகப் பார்வையீட்டுத் திட்டம்'

அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை மையங்களைப் பார்வையிட்டு, உடலியலாமை மற்றும் மன நலப் பிரச்சினைகள் உள்ள நோயாளர்களது உரிமைகளுக்காக ஆதரவுரை அளிக்கும் ஒரு சுதந்திர முறைப்பாட்டுத் தீர்வு அமைப்பகும் இது.

தொலைபேசி 08 7425 7802, அல்லது

நாட்டுப்பகுதி இலவச அழைப்பு 1800 606 302

www.sa.gov.au/ எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் (பிறகு 'சமூகப் பார்வையீட்டுத் திட்டம்' (Community Visitor Scheme) எனும் பகுதியைத் தேடுங்கள்)

‘பொது வழக்குரைஞர் அலுவலகம்’

முடிவெடுக்கும் திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு அறிவுரை வழங்கி, ஒத்தாசை செய்து ஆதரவுரை அளித்து சுகாதார–கவனிப்பு குறித்த முடிவுகளில் எழும் சர்ச்சைகளைத் தீர்க்க உதவும் ஒரு சுதந்திர முகமையாகும் இது.

தொலைபேசி 08 8342 8200, அல்லது நாட்டுப்பகுதி இலவச அழைப்பு 1800 066 969

www.opa.sa.gov.au

மேல்முறையீடுகள்

‘முன்கூட்டிய கவனிப்பு உத்தரவு’ ஒன்றைப் பற்றி, அல்லது மருத்துவ சிகிச்சை அல்லது சுகாதார–கவனிப்பு ஆகியவற்றைப் பற்றி சர்ச்சை ஏதும் இருந்தால், ‘பொது வழக்குரைஞர் அலுவலகம்’ மூலமாக மத்தியஸ்தம் நாடும் உரிமை உங்களுக்குள்ளது.

அவசரமான வேலை நேரத்திற்கு அப்பாற்பட்ட வழக்குகளுக்கு ‘பொது வழக்குரைஞர் அலுவலக’த்துடன் (08) 8378 3333 எனும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

‘மன நல சட்டம் 2009’–இன் படியான சமூக அல்லது உள்நோயாளர் சிகிச்சை உத்தரவு ஒன்றின் கீழ், அல்லது ‘பாதுகாவல் மற்றும் நிர்வாக சட்டம் 1993’–இன் ‘பிரிவு 32’–இன் படியான உத்தரவின் கீழ் நீங்கள் இருந்தால், மற்றும் இந்த உத்தரவில் உங்களுக்குத் திருப்தியில்லை என்றால், ‘சவுத் அவுஸ்திரேலிய குடிமை மற்றும் நிர்வாக முறைமன்ற’ (South Australian Civil and Administrative Tribunal (SACAT)) த்திற்கு (இது முன்பு ‘பாதுகாவல் அமைப்பு’ எனப்பட்டது) மேல்முறையீடு செய்யும் உரிமை உங்களுக்குள்ளது.

‘பாதுகாவல் மற்றும் நிர்வாக சட்டம் 1993’–இற்கு உட்பட்டு, மாவட்ட நீதிமன்றம் (District Court) அல்லது உயர் நீதிமன்ற (Supreme Court)த்தில் SACAT – இன் முடிவைக் குறித்து மேல்முறையீடு செய்யும் உரிமை உங்களுக்குள்ளது. SACAT – உடன் 1800 723 767 எனும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம், அல்லது www.sacat.sa.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

சவுத் அவுஸ்திரேலிய அரசு மற்றும் பொதுநல அரசு ஆகியவற்றிற்கிடையேயான ‘தேசிய சுகாதார கவனிப்பு ஒப்பந்த’த்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு ‘உங்களது உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்’ எனும் குறுநூலானது ‘பொது நோயாளர்கள் மருத்துவமனைகள் சாசன’த்தின் வடிவமாக அமைகிறது.

இக் குறுநூலின் பிரதிகளைப் பின் வரும் வழிகளில் பெறலாம்:

நோயாளர்கள் மற்றும் கவனிப்பாளர்களுக்கு:

www.sahealth.sa.gov.au

மருத்துவமனைகள் மற்றும் சுகாதார சேவைகளுக்கு:

SA Health Distribution Centre

மின்னஞ்சல்: healthPSCMSCOcustomerService@sa.gov.au

தொலைநகல்: 08 8124 4655

www.sahealth.sa.gov.au

Public-I1-A1

நுகர்வோர்கள் மற்றும் சமூகத்தினருக்காக ஃபிப்ரவரி 2016–இல் இந்த ஆவணம் – SQCAG*யினால் மீள்பார்வையிடப்பட்டு ஆமோதிக்கப்பட்டது.

Interpreter

BY NC ND

www.ausgoal.gov.au/creative-commons

© ‘சுகாதாரம் மற்றும் மூப்படைவுத் திணைக்களம்’,
சவுத் அவுஸ்திரேலிய மாநில அரசு.
அனைத்து உரிமைகளும் காப்பு செய்யப்பட்டுள்ளன.

ISBN: 978 07 03 898 276 FIS: 16002. 1 ஏப்ரல் 2016

*SA Health Safety and Quality Community Advisory Group.

Government of South Australia

SA Health